

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (25.11.2024) பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் 5–வது மண்டல அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் இரண்டாம் கட்டமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் வாயிலாக ஊட்டச்சத்தை உறுதி செய்கின்ற நோக்கில் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, , மண்டலகுழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, மாவட்ட திட்ட அலுவலர் திருமதி.கிருஷ்ணவேனி, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.வனிதா தேவி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழக இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டின் ஈரோடு சம்பத் நகரில் உள்ள ஆட்டோ நிறுத்தும் இடத்தில் ஓட்டுனர்களுக்கு நிழல்குடையை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்து 15 பேருக்கு சீருடைகள் வழங்கினார். நிகழ்வில் மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியன், செல்லப்பொன்னி, துணை மேயர் வி.செல்வராஜ்ஃ இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சீனிவாசன், சசிகுமார், அந்தியூர் இரா.நித்தின் மாணவரணி மணி, சிவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## விமானக் கட்டண உயர்வால் பாதிக்கப்படும்

# சுற்றுலாத்துறையை மீட்க ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## கழக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, நவ.26-

விமானக் கட்டணம் உயர்வு போன்ற காரணங்களால் பாதிக்கப்படும் உள்நாட்டுச் சுற்றுலாவை மீட்கவும், விமானக் கட்டண நிர்ணயத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பன போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் வினவினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு : -

உள்நாட்டு விமானங்களின் கட்டணம் அதிகரித்து வருவதால் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுவரும் பாதிப்புகள் குறித்து ஒன்றிய அரசு சமீபத்தில் ஏதேனும் ஆய்வு மேற்கொண்டதா என்றும் அப்படியானால் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.



உள்நாட்டுச் சுற்றுலா விமானக் கட்டணம், பயணிகளுக்கு குறைந்த விலையில் கிடைப்பதையும், வெளிப்படையான விலை நிர்ணயத்தையும் உறுதி செய்ய, விமான நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை ஆணையங்களுடனும் இணைந்து, ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று கேள்வி எழுப்பினார்.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைக் குறைவு காரணமாக பாதிக்கப்பட்டு வரும் ஹோட்டல், உணவகங்கள், சுற்றுலா அமைப்பாளர்களின் வர்த்தகம் உள்ளிட்ட உள்ளூர்ச் சுற்றுலா வணிகத்தில் ஏற்பட்டு வரும் பாதிப்புகள் குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் ஆய்வு மேற்கொண்டுள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

உள்நாட்டுச் சுற்றுலாவுக்கான விமானப் பயணக் கட்டணம் அதிகரிப்பதை, மானியம் அல்லது ஊக்கத்தொகை போன்ற திட்டங்கள் மூலம் சரிசெய்ய ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகமும், விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகமும் இணைந்து செயல்படும் திட்டம் உள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

விமானக் கட்டணம் போன்ற பயணச் செலவுகளின் மாறுபாடுகளால், உள்நாட்டுச் சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்காமல், நிலைத்த வளர்ச்சியைப் பெறுவதற்கான ஒன்றிய அரசின் நீண்டகாலத் திட்டங்கள் என்ன என தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

## தலைமை கோல்டு டி.பிரகாஷ்! ப.குணாளன் – என். சந்திரன் வரவேற்புரை! இன்று–

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்! மாபெரும் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## அமைச்சர் தா.மோ அன்பரசன் – டி. ஆர். பாலு எம்.பி. – ஆர். எஸ். பாரதி – திண்டுக்கல் ஐ.லியோனி – பிரபு கஜேந்திரன் – ரூ. கீர்த்தனா பங்கேற்பு!

சென்னை.நவ.26

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திமுக இளைஞரணி சார்பில் கழக இளைஞரணி செயலாளர்- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் தலைமையில் இன்று (26.11.2024 செவ்வாய்கிழமை) மாலை 5.00 மணிக்கு தர்மராஜா கோவில் தெரு, ஆலந்தூர் - 16.-ல் நடைபெறுகிறது.

மாவட்டச் செயலாளர்- அமைச்சர் தா.மோ அன்பரசன் - திண்டுக்கல் ஐ லியோ னி - டி. ஆர். பாலு எம்பி- கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி. பிரபு கஜேந்திரன், இளம் பேச்சாளர் ரூ. கீர்த்தனா ஆகியோர் பங்கேற்று நல்ல உதவிகள் மற்றும் சிறப்புரையாற்றுகின்றனர்.

ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப. குணாளன், ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் எம் சந்திரன் எம்.சி. ஆகியோர் வரவேற்கின்றனர்.

வீ.விஜயகுமார்,டி.கே. கமலக்கண்ணன், கோ.ஜானகி ராமன், ப.ராமமூர்த்தி, கே.மணி கண்டன், பி.கி.அ. சத்தியபிரபு, ஜெ.இன்ச மாம், வீ.கார்த்திக், ச.இராஜேஷ், வே.சிவசு ப்பிரமணி யன், ச.பிரபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் எம்.எஸ்.கே இப்ராஹிம், ஆர் டி பூபாலன், கீதா ஆனந்தன், ரா. பாஸ்கரன், சாய் ஜெய்காந்த் பாரதி, பேராசிரியர் பிரபு, ஆர்.ஆர்.ஜெய்ராம், மார்த்தாண்டன், கே.ஆர். ஆனந்தன், கலாநிதி குணாளன், ஆலந்தூர் வடக்கு பகுதி நிர்வாகிகள் வே.டில்லிபாபு கோ.கோடீஸ்வரன் எம்.சி., ஐ.அழகேசன் ஜெய செல்வம் எம்.சையத் அபுதாஹீர் ஆலந்தூர் தெற்கு பகுதி நிர்வாகிகள் ப.து.செயலாளர் பொரு ஜி.சுந்தர்ராஜன் ஏ. சாலமோன் ஆர். பாபு கே.ராஜேஸ்வரி இ. ரமேஷ்

ஆலத்தூர் வடக்கு - தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எம்.ஆர்.சீனிவாசன் ஜெ.செல்வேந்தி ரன், டி.ரவி, ம.கோ.கருணாநிதி, ப.கிருஷ்ணமூர்த்தி, ஏ.ஆர்.சரவணா, ஏ.வேலவன், டி.ஜேசுதாஸ் கே.ஆர்.ஜெகதீஸ்வரன் இ. உலக நாதன் ஜெ.நடராஜன் ஆலந்தூர் வடக்கு-தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் கே.பாபுகுமார், த.மனோகரன், ச.பூவராகவன், இரா. கீர்த்திராஜ், பி.திருமாறன், ஜி.ஆர்.வெங்கடேசன், மு. முனியாண்டி, அ.குப்புசாமி, ம.சத்யா, டி.ஜெயக்குமார், பி .செல்வம், மூ.வெள்ளை ச் சாமி, ஜி.வீரராகவன், கோ. பிரபாகரன், என்.பெருமாள், அபிஷேக்கிருஷ்ணா, பி.வேல்முருகன், வி. ரமணா, இ. வெங்கட்ராமன், கே.வெற்றிவேல், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் இ.கார்த்திக், சையத்சுலைமான், ஜெ.குமரன், ஆ.திபக், எஸ்.வாசிம் ராஜா, பி.செல்வகுமார், ஏ. உதயகுமார், க.செந்தில்கு மார், பால அமுதநாதன், தி.மு.காமராஜ், கே. .கே.சண்முகம், பி.ஜாபர் அலி, ஜெ. அண்ணாதுரை, வெப்பேரி தங்கம், ஜெ.சசிகுமார், ஆர்.விஜய சங்கர், பி.சிவராமன், குருதாயாள் சிங், எஸ்.உதயகுமார், ஆர்.அன்பு, எழில், எஸ்.விக்னேஷ், க. சிவராமன், க.சாந்தி, செண்பகவள்ளி, ஜெ.கிரண்புரூஸ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இறுதியில் 160 மது வட்ட கழகச் செயலாளர் கே.பி முரளி கிருஷ்ணன் நன்றி உரையாற்றுகிறார்.

கோ.பிரவீன்குமார், எஸ். ஜெனார்த்தனன், எம்.விக்னேஷ், சுனில் பால்ராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்:

# தாம்பரம் மாநகரம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தாம்பரம், நவ.26-

தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் வழியில் தடம் மாறாமல் தடுமாறாமல். திராவிட இயக்கத்தின் கொள்கை போர் வீரன் இளைஞர் அணியின் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை மாநகர் முழுவதும் எழுச்சியோடும் மகிழ்ச்சியோடும் கொண்டாடிடுவீர்.

தாம்பரம் மாநகரத்துக்கு உட்பட்ட பத்து பகுதி கழகத்திற்கு உட்பட்ட 70 வட்டங்களிலும் புதிய கொடி கம்பங்கள் அமைத்து கழகத்தின் இரு வண்ணக் கொடியை உயர்த்தி ஒலி ஒளி அமைத்து எளியோர் நலம் காக்கும் அரசாக திகழ்கிற நமது அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி பொதுமக்களுக்கும் மாணவ - மாணவிகளுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிற்றுண்டிகள் உணவுகள் ஆதரவற்றோர் முதியோர் இல்லங்களில் அறுசுவை உணவு மற்றும் உபகரண உதவிகள் வழங்கி அனைத்து தரப்பினரும் பங்கேற்கக்கூடிய வகையில் இளைஞர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி கொண்டாடிட வேண்டும். நிகழ்ச்சியினை மாற்றாரும் வியக்கும் வண்ணம் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமாய் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.



செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கண் சிகிச்சை முகாமை பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தலைமையில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் க.வசந்தகுமாரி, கோ.காமராஜ், இ.ஜோசப் அண்ணாதுரை, இ.எஸ்.பெர்னாட், அ.தமிழ்மாறன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மூக்கு கண்ணாடி தேவை ஏற்படும் பயனாளிகளுக்கு 37 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகாலட்சுமி கருணாகரன் ரூபாய் 5 லட்சம் மதிப்புள்ள மூக்கு கண்ணாடிகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளார். இதில் க.ரமேஷ், கோ.ஜானகிராமன், எம்.ஐ.டி.எஸ்.விஜய், கே.தனசேகரன், ஜெ.வேனுகோபால், சி.ஆர்.எம். மனோஜ் குமார், ஏ.வீரபத்திரன், கே.பூபதி, எச்.பாஸ்கரன், சரஸ்வதி சந்திரசேகர் எம்.சி, டி.கார்த்திக், ஜெ. ஜெகநாதன், ம.பற்குணன், ஓ.தண்டபாணி, சி.ஆர்.மதுரை வீரன், எம்.நாகராஜ், ஆர்.ராதாகிருஷ்ணன், ஜெ.வி. சந்திரசேகர், எம்.சார்லஸ், சரண்யா மதுரைவீரன், என்.கண்ணன், சி.ஆர்.நரேஷ்குமார், எல்.டில்லிபாபு, எம். இளவரசன், குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். எஸ்.மன்னா ராஜாகண்ணா நன்றி கூறினார்.



தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது குறித்து ஆலோசனை செய்ய மாதவரம் வடக்கு பகுதி திமுக செயல் வீரர்கள் கூட்டம், பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில், மாத்தூரில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா மதிவாணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்றார். பகுதி அவைத் தலைவர் வி.திராவிட வீரன் தலைமையில், வட்டச் செயலாளர்கள் கே.அங்குசாமி, கே.கருணாகரன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன், இ.கண்ணப்பன், பகுதி நிர்வாகிகள் கே.சிவசங்கரன், ஆ. ராஜேந்திரன் எம் சி, கௌரிசங்கரால், நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், பி.நிர்மல் குமார், பி.தரணி, கே. செல்வன்,கே.ராஜா, மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, எஸ். கோபாலகிருஷ்ணன், மாத்தூர் கோபிநாத், எஸ். உதயகுமார், எஸ். கருணாகரன், எஸ். சிவகுமார், கே. சண்முகப்ரியன், ஹெச். பீர்முகமது, டி. வினோத், டி. அமிர்தராஜ், கொசப்பூர் வெங்கடேசன், இ.எம், மனோகரன், துரை தசரதன், அமுதா, சுதா, எஸ். சுதா, கலைச்செல்வி, எம். என், அஜய் தென்னவன், ரா.குகன், சசிதரன், வக்கீல் சண்முகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் !

# பம்மல் தெற்கு பகுதி முழுதும் கழக கொடியே ற்றி நல்ல உதவிகள் !

## பகுதிச் செயலாளர் வே.கருணாநிதி அறிக்கை !

சென்னை,நவ.26-

பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் பகுதி செயலாளர்,மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி தலைமையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 27.11.2024 புதன்கிழமை அன்று காலை 7.30 மணிக்கு பம்மல் இரட்டைப்பிள்ளையார் கோவில் அருகில் 1000 நபர்களுக்கு அன்னதானம் வழங்கும் விழா நடைபெறவுள்ளது.

இவ்விழா 6வது வட்ட செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன்,6வது வார்டு மாமன்ற உறுப்பினர் கல்யாணி டில்லி அகியோர் வரவேற்புரையில் பகுதி அவைத் தலைவர் ப. காளேஸ்வரன்,பகுதி பொருளாளர் உமாசங்கர்,பகுதி துணை செயலாளர் துரை இளங்கோவன்,பா.கவிதா மாவட்ட பிரதிநிதி பா. டில்லி,மாநகர பிரதிநிதி பி.ஜே. வேந்தன், என். கே.ரவிச்சந்தின்,இரா.கந்தவேலு,ரா.கோகுல்,

சு.மனோகரன் ஆகியோர் முன்னிலையில் கழக பொருளாளர் மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு,குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு தா. மோ.அன்பரசன் அகியோர் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ, எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ மேயர் வசந்தகுமாரி, கமலக்கண்ணன்,

துணை மேயர் கோ.காமராஜ்,பல்லாவரம் தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன்,பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ. தமிழ்மாறன்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் வி.ரவிச்சந்திரன்,மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி. கே.ஏ.சத்தியபிரபு,தலைமை கழக இளம் பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ் அகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இறுதியாக பகுதி துணை செயலாளர் என்.பன்னீர்செல்வம் நன்றியுரையாற்றுகிறார்.

இதனை தொடர்ந்து பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட வட்டங்களிலும் கீழ் கண்ட நிகழ்ச்சி நிரல்படி கழக இருவண்ண கொடியேற்றி இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

5வது வட்ட செயலாளர் ஏ.அனிஸ்டன் தலைமையில் சங்கர் நகர் ஆட்டோ நிறுத்தம் அருகில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அன்னதானம் வழங்குகிறார்.

6வது வட்ட செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் தலைமையில் பம்மல் இரட்டை பிள்ளையார் கோவில் அருகில் பகுதி அவைத்தலைவர் ப. காளேஸ்வரன் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அன்னதானம் வழங்குகிறார்.

7வது வட்ட செயலாளர் மு.இன்பசேகர் தலைமையில் விக்னேஷ் மஹால் மற்றும் சிக்னல் ஆபிஸ் அருகில் பகுதி துணை செயலாளர் என்.பன்னீர்செல்வம் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அன்னதானம் வழங்குகிறார்.

8வது வட்ட செயலாளர் என்.காந்தி தலைமையில் பம்மல் மெயின் ரோடு கிருஷ்ணா நகர் பேருந்து நிறுத்தம் அருகில் பகுதி செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அன்னதானம் வழங்குகிறார்.

10வது வட்ட செயலாளர் எச்.முகமது அப்பாஸ் தலைமையில் மோசஸ் சாலையில் பகுதி துணை செயலாளர் பா.கவிதா கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அன்னதானம் வழங்குகிறார்.

11வது வட்ட செயலாளர் மா.சாலா (எ)சுகுமாரன் தலைமையில் ஆதம் நகர் 1வது தெருவில் பகுதி பொருளாளர் R. உமாசங்கர் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அன்னதானம் வழங்குகிறார்.

12வது வட்ட செயலாளர் பி.ஸ்ரீதர் தலைமையில் டாக்டர் அம்பேத்கர் நகர்அம்பேத்கர் சிலை அருகில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அன்னதானம் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சிகளில் பம்மல் தெற்கு பகுதிக்குட்பட்ட அனைத்து கழக நிர்வாகிகளும் கலந்து கொள்ளுமாறு பகுதி செயலாளர் வே.கருணாநிதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகர பகுதியை சேர்ந்த கல்லூரி மாணவன் நிவேந்தன் கல்லூரியில் கட்டணம் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இந்நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் திருத்தணி சட்ட மன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் கல்லூரி மாணவனை நேரில் அழைத்து கல்லூரி கட்டணத்தை வழங்கினார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சிறுபான்மை நலக்குழு அமைப்பாளர் ஏ. நூருல் அமீன் அவர்களின் மகள் திருமண நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மாவட்ட கழக செயலாளர் .க .சுந்தர் எம் எல் ஏ கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஆ. மனோகரன், மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டிஆர். நாராயணன், ஆர்.டி. அரசு, எம்.எஸ். சுகுமார். மேயர். திருமதி மகாலட்சுமி. நகர செயலாளர் கே. குமார் உள்ளிட்ட உட்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.